3.11.2025

அ.வ.எண். 338/2017

வா.சா.1 சித்ரா க/பெ. கணேசன்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 03.11.2025 is accordance with the provision of Act X of 3331

<u>**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

1. கூடுதல் பிரம்மாண வாக்குமூலத்தில் உள்ள வா.சா.ஆ.7 முதல் வா.சா.ஆ.18 ஆவணங்களின் விவரங்களை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, பிரதிவாதி வழக்கறிஞர் குறுக்குவிசாரணையில் கேட்டுக்கொண்டதால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.7 செட்டில்மெண்ட் ஆவணத்தில் மூல ஆவணமாக என்னென்ன சொல்லியுள்ளேன் என்றும் எந்த ஆவணத்தின் அடிப்படையில் சொத்து பாத்தியப்பட்டது என சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நத்தம் நிலவரி திட்ட தூய சிட்டா எண்.490, 492 -ன்படி பாத்தியப்பட்டது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சொத்து எனக்கு மேற்படி பட்டா எண்கள்படி பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

2. மேற்படி பட்டா எண்களின்படி உள்ள விஸ்தீரணத்தின்படி எனக்கு சொத்து பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சிட்டா எண்.490 மற்றும் 492 -ல் உள்ள அளவுகள் கொண்ட வருவாய் ஆவணங்களான புலப்படம் மற்றும் அடங்கல் தாக்கல் செய்யவில்லை என்றால் அடங்கல் மற்றும் சிட்டா தாக்கல் செய்துள்ளேன். வரைபடம் தாக்கல் செய்யவில்லை. வரைபடத்தை தாக்கல் செய்தால் நான் கோரியுள்ள அளவுகள் அதிகமாக உள்ளது என்பது தெரிந்துவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 7 செட்டில்மெண்ட் ஆவணத்தில் 1923 ஆம் ஆண்டு மூலப்பத்திரமான கிரையப்பத்திரம் குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ.9 அடமானக்கடன் பத்திரம், வா.சா.ஆ.11 Equitas வங்கியில் வைத்த அடமானக்கடன் பத்திரம் மற்றும் வா.சா.ஆ.12 கட்டிட அனுமதி வரைபடம் ஆவணங்களை வழக்கு தாக்கல் செய்த பின்பு தயார் செய்துள்ளேன் என்றால் இல்லை. இந்த வழக்கு எப்போது தாக்கல் செய்யப்பட்டது என்றால் தெரியவில்லை.

என் கணவர்தான் தாக்கல் செய்தார் . மேற்படி ஆவணங்கள் எப்போது ஏற்படுத்தப்பட்டது என்றால் 4 வருடங்கள் ஆகிறது. மேற்படி கடனை அடைத்துவிட்டேனா என்றால் நிலுவையில் உள்ளது. நான் பொய்யாக சொல்கிறேன் என்றும், நான் கடனை வாங்கவில்லை என்றும், அதை திரும்ப செலுத்தவில்லை என்றும், மேற்படி ஆவணங்களை வழக்கிற்காக தயார் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

4. வா.சா.ஆ.18 வில்லங்க சான்றிதழ் நான் தாக்கல் செய்துள்ளேன். அதில் நான் சொன்ன 2 அடமானக்கடன் பத்திரத்தின் பதிவுகள் உள்ளதா என்றால் உள்ளது. ஆவணத்தை காட்டி கேட்டபோது எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது என சாட்சியம் அளிக்கிறார். வா.சா.ஆ.11 ஆவணத்தின் பதிவுகள் நான் தாக்கல் செய்த வில்லங்க சான்றிதழில் இல்லை என்றும் நான் வழக்கிற்காக தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.11 -ன் பதிவு எண்கள் என்ன என்றால் தெரியாது. வா.சா.ஆ.11 ஆவணத்தின் பதிவு எண்கள், வில்லங்க சான்றிதழில் இல்லை என்றும் நான் வழக்கிற்காக தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆவணத்தை காட்டி கேட்டபோது சாட்சி தெரியவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார்.

5. வா.சா.ஆ.11 ஆவணத்தின் பதிவு எண்கள், வில்லங்க சான்றிதழில் இல்லை என்றும் அதை தெரிந்து கொண்டு தெரியவில்லை என்று நான் சாட்சியம் அளக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் சம்மந்தமான குறிப்புகள் வா.சா.ஆ.18 வில்லங்க சான்றிதழில் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின் வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.7 செட்டில்மெண்ட் ஆவணம் வழக்கு தாக்கல் செய்தபின்னிட்டு தயா'ர செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 செட்டில்மெண்ட் ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக மேற்படி ஆவணத்தை பைனான்ஸில் வைத்து கடன் பெற்றுள்ளேன்.

6. பைனான்ஸில் ஆவணத்தை வைத்ததற்கான ஆவணத்தை தாக்கல்

செய்துள்ளேனா என்றால் ஆமாம். மேற்படி விவரத்தை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் ஆவணத்தில் உள்ள சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்யவில்லை. மேற்படி ஆவணமானது வா.சா.ஆ.7 மற்றும் 9 ஆவணங்கள் என்றால் வா.சா.ஆ.7 ஆவணம் வரும். வழக்கு எந்த சர்வே எண்ணில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது. வழக்குரை விபரம் மற்றும் பிரம்மாண வாக்குமூலத்தில் எந்த சர்வே எண்ணிற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொல்லவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை.

7. வா.சா.ஆ.7 செட்டில்மெண்ட் ஆவணத்தில் 2-வது பக்கத்தில் சொத்து எனக்கும், உனக்கும் நத்தம் நிலவரித்திட்ட தூய சிட்டா எண்கள் 490, 492-ன்படி கூட்டாக, சுயமாக பாத்தியப்பட்டது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் சொத்து பிதுரார்ஜித வகையில் பாத்தியப்பட்டது அல்லது பேச்சிமுத்து அல்லது பேச்சியம்மாளுக்கு பாத்தியப்பட்டது என இல்லை என சரிதான். வழக்கு சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்றும், அதை பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர் என்று வட்டாட்சியருக்கோ அல்லது வருவாய்த்துறை அதிகாரி களுக்கோ ஏதேனும் புகார் கொடுத்து நடவடிக்கை எடுத்தேனா என்றால் கொடுத்துள்ளேன். அவ்வாறு ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

8. அவ்வாறு நான் எந்தவித புகாரும் கொடுக்கவில்லை என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக வட்டாட்சியருக்கோ அல்லது வருவாய்த்துறை அதிகாரிகளுக்கோ சொத்தை அளக்க வேண்டி மனு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு மனு கொடுத்ததன் பேரில் சொத்தை அளக்க வந்தார்களா என்றால் இல்லை. சொத்தை அளக்காதது சம்மந்தமாக நான் மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தேனா என்றால் ஆமாம். அந்த மனுவை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கில் சொல்லியுள்ள அளவுகள் எனக்கு பாத்தியப்பட்டதல்ல என்றும், அவ்வாறு பாத்தியப்பட்டிருந்தால் நான் வட்டாட்சியர்

மற்றும் வருவாய் அதிகாரியிடம் மனு கொடுத்து அதனை அளந்து தருமாறு கேட்டு இருந்திருப்பேன் என்றும், அவ்வாறு அளவுகள் எனக்கு பாத்தியப்பட்டது இல்லை என்பதால், நான் மனு கொடுக்காமல் நேரடியாக சில தவறான ஆவணங்களை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur